**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 20 of 2023**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சசிக்குமார் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A2 Present. A1 absent. Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated. 05.11.2025**

**முதல் விசாரணை**

நான் குலமாணிக்கத்தில் வசித்து வந்து மாந்துறை, மஹாலெட்சுமி ஐயங்கார் பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 20.12.2022 ம் தேதி காலை 11.45 மணியளவில் மாந்துறை பஸ் ஸ்டாப் அருகில் இலால்குடி போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். இவ்வழக்கின் எதிரியான அந்தோணி, சரவணன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்களை போலீசார் விசாரணை செய்தபோது வாகனத்தை திருடியதை எதிரிகள் இருவரம் ஒப்புக் கொண்டனர். போலீசார் ஒப்புதல் வாக்குமூலத்தை எங்களது முன்னிலையில் பதிவு செய்தார்கள். அதில் நானும், அன்பழகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.6/அ.சா.5** ஆகும். பின்னர் TN 48 AV 6088 பதிவெண் உடைய இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட இருசக்கர

வாகனத்தை மாந்துறை பஸ் ஸ்டாப் அருகில் காலை 11.45 மணியளவில் போலீசார் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர்களில் நானும், அன்பழகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். பின்னர் போலீசார் இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட, நம்பர் பிளேட் இல்லாத மற்றொரு இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், அன்பழகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.7/அ.சா.5** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.8/அ.சா**.5 ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து ஏற்கனவே சா.பொ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் எங்களையும், எதிரிகளையும் எதிரி அந்தோணி என்பவரது வீட்டிற்கு அழைத்து சென்று அவரது வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்து போலீசாரிடம் அடையாளம் காட்டி ஆஜர் செய்த நம்பர் பிளேட் அழிக்கப்பட்ட TVS XL, Hero Honda +, TVS Honda ஆகிய வாகனங்களை கைப்பற்றினார்கள். அப்போது மதியம் சுமார் 01.30 மணி இருக்கும். அந்த கைப்பற்றுதல் மகஜர்களில் நானும், அன்பழகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.9/அ.சா.5** ஆகும். 20.12.2022 ம் தேதி 14.30 மணியளவில் எதிரி அந்தோணி வீட்டின் அருகே போலீசாரால் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.10/அ.சா.5** ஆகும். கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட, நம்பர் பிளேட் இல்லாத TVS XL Super Heavy Duty ஒன்று **சா.பொ.2** ஆகும். இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட, நம்பர் பிளேட்

இல்லாத Hero Honda Splender+ ஒன்று **சா.பொ.3** ஆகும். இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிக்கப்பட்ட, நம்பர் பிளேட் இல்லாத TVS XL Super ஒன்று **சா.பொ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2025.11.05 17:12:36 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி